**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 124/2009**
**நாள்.03.03.2026**
**பி.வா.சா.1- சின்னான்**
**த/பெ - மஞ்சன் அம்பலம்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனக்கு 70 வயதாகிறது. தாவா வழக்கில் நான் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி பிச்சை எனக்கு தம்பி.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

3. எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் நாங்கள் தான் கூறினோம். நாங்கள் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான்.

4. சர்வே எண்.8/2 மற்றும் 8/3க்கு SLR நகல் கேட்டு மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 எப்படி என் கைவசம் வந்தது என்றால் நான் மாவட்டஆட்சியர் அலுவலகம் சென்று வாங்கிவந்தேன். 14.07.2022ம் தேதி பி.வா.சா.ஆ.7 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7ல் தமிழ்நாடு அரசு முத்திரை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 SLR எந்த வருடத்திற்கான ஆவணம் என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை.

5. சர்வே எண்.8/2ல் தம்பி சின்னான் என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர் யார் என்றால் அவர் எனது முப்பாட்டன். எனது தந்தையின் பெயர் மஞ்சன்அம்பலம். செல்லப்பெருமாள் யார் என்றால் தம்பிசின்னன் மகன் ஆவார்.

6. கொடிவழி ஜாபிதாவில் தம்பி சின்னான் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி தெரியாது.

7. சர்வே எண்.8/3ல் குறிப்பிடப்பட்டுள்ள செல்லப்பெருமாள் எனது பெரியப்பா, செல்லன் எனது பெரியப்பா. கொடிவழி ஜாபிதாவில் செல்லப்பெருமாள் மற்றும் செல்லன் எனது பெரியப்பாக்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் செல்லப்பெருமாளின் தந்தை தம்பிசின்னான் என்பது பற்றி கூறவில்லை என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது.

9. எதிர்வழக்குரையில் 16வது பாராவில் செல்லப்பெருமாளின் தந்தை ஆண்டிஅம்பலம் என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது செல்லப்பெருமாளின் தந்தை தம்பிசின்னான் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. பி.வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள எனது தம்பியின் நிரூபண வாக்குமூலத்திலும் செல்லப்பெருமாளின் தந்தை ஆண்டிஅம்பலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவருக்கு அதுபற்றி தெரியாது.

11. செல்லப்பெருமாளின் தந்தை ஆண்டி அம்பலம் தான் என்றாலும் தற்போது ஆவணங்களின் படி செல்லப்பெருமாளின் தந்தை தம்பிசின்னான் என்று இருப்பதால் செல்லப்பெருமாளின் தந்தை தம்பிசின்னான் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. எதிர்வழக்குரையில் சர்வே எண்.8/2 மற்றும் 8/3 ஆகியவை ஆதியில் தம்பி சின்னான், செல்லான் மற்றும் செல்லப்பெருமாள் ஆகியோர் பெயரில் SLR இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

13. தம்பிசின்னான் அவரிடம் இருந்த சொத்துக்களை ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றாலும் அது தற்போது பலருடைய கைக்கு மாறிவிட்டது என்றாலும் சரியல்ல.

14. தாவா சொத்துகளுக்கு 1946லிருந்து வில்லங்க சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. 1ம் வாதியான சங்கன் அம்பலத்தின் தந்தை சின்னான் தாவா சொத்துக்களை 27.05.1927ம் தேதி கிரையம் பெற்றதாக கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த கிரையத்தை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்று தெரியாது.

16. தாவா சொத்து சம்பந்தமாக 1910 லிருந்து வில்லங்கம் போட்டு பார்த்தோம். 1910-1945 வரையிலான வில்லங்க சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

17. 1910-1945 க்கு இடையில் குறிப்பாக 21.05.1917ம் தேதியில்

தம்பிசின்னான் ஆடுமேய்க்கிஅம்பலத்தார் மக்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

18. அவ்வாறு தம்பிசின்னான் ஆடுமேய்க்கிஅம்பலத்தார் மக்களுக்கு கிரையம் செய்து கொடுத்த விவரத்தை தெரிந்து கொண்டதால் தான் 1910-1945 வரையிலான வில்லங்க சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

19. தம்பிசின்னானுக்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், அவர் எங்களது முப்பாட்டன் என்று கூறுவது அப்பட்டமான பொய் என்றாலும் சரியல்ல.

20. பி.வா.சா.ஆ.7ல் காட்டப்பட்டுள்ள செல்லப்பெருமாள் மற்றும் செல்லான் ஆகியோருக்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.7ல் செல்லப்பெருமாள், செல்லான், தம்பிசின்னான் ஆகியோரின் தந்தை பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

21. சர்வே எண்.8/2 மற்றும் 8/3 நிலங்களுக்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், சம்பந்தமில்லாத ஆவணங்களை எங்கள் தரப்பில் தாக்கல் செய்து நீதிமன்றத்தை திசை திருப்ப முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரைக்கும், நிரூபண வாக்குமூலத்திற்கும் முன்னுக்குபின் முரணான சங்கதிகளை கூறி நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை கூறி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

22. சர்வே எண்.8/2 மற்றும் 8/3க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் எங்களது எதிர்வாதம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**